# தேசிய விவசாயக் கொள்கை (தே.வி.கொ.)

## முகவுரை

விவசாயமானது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற ஒரு நாட்டின் சமூகப் பொருளாதாரத்தின் முக்கியமான ஒரு அம்சமாக விளங்குகின்ற அதே நேரம் சமூக பொருளாதார அபிவிருத்தியில் மிகவும் முக்கியமான 'தனித்துவமான' ஒரு பங்கையும் வகிக்கின்றது. இந்த விவசாயத் துறை உணவுப் பாதுகாப்புக்கும் மற்றும் போஷனை பாதுகாப்புக்கும் உதவுகின்றது. அது மட்டுமன்றி நாட்டின் இயற்கை வளங்களின் நிலையான பாவனையை உறுதிப்படுத்தும் அதே வேளையில் தொழில் வாய்ப்புகளுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் ஏற்றுமதிகள் சம்பாத்தியத்திற்கும் கணிசமானளவு பங்களிப்புச்செய்கின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்திற்கு (ஆரம்ப உற்பத்தி) இலங்கையின் விவசாயத் துறையின் பங்களிப்பானது (நிலையான சந்தை விலைகளில் மொ.உ.உ.) மொத்த ஏற்றுமதியில் ஏறக்குறைய 7.0% மற்றும் 21.7% வீதம் என்றளவில் காணப்படுகின்றது. இது தற்போதைய நிலையில் தேசிய ஊழியர்படையின் 23.73% வீதத்திலும், மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய 45% வீதத்திலும் சம்பந்தப்படுகின்றது. எனினும், நாட்டினது சமூகப் பொருளாதாரத்திற்கும், சுற்றாடலுக்கும் விவசாயத்திலிருந்து கிடைக்கும் உண்மையான சரியான பங்களிப்பை மதிப்பிடுவது கடினமான விடயமாகும்.

நீண்டகாலமாக கட்டமைப்பு சார்ந்த பரிவர்த்தனை நிகழ்ந்து வருவதால் ஒரு நாட்டின் விவசாயத் துறையின் முக்கியத்துவமானது (ஆரம்ப உற்பத்தி) ஒப்பீட்டளவில் குறையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இலங்கை செளிப்பான பல்லினத்துவம் வாய்ந்த இயற்கை வளங்கள் நிறைந்த ஒரு அருள் கொடையான தீவாக திறமுறை ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த புவியியல் அமைப்பில் அமைந்திருந்தாலும், இந்த விவசாயத் துறைக்கு நீண்டகால கவனமும் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கு அதன் பங்களிப்பை வலுப்படுத்துவதற்கான கவனமும் இன்னும் அவசியப் படுகின்றன. உண்மையில், பல நிலமைகளில் விவசாயத்திற்கு சவால்கள் காணப்படுகின்றன. ஆயினும் நிலம், நீர் மற்றும் மண், குறைந்த விவசாய வருமானம், பலவீனமான சந்தை சார்ந்த தொடர்புகள், அறிவு, தொழில்நுட்பம் மற்றும் தகவல் பரம்பல் முதலியவற்றில் குறைந்தளவான முதலீடு முதலியன போன்ற வளங்களின் தகாத முகாமைத்துவம் மற்றும் குறைந்தளவு விவசாய உற்பத்தித்திறன் அடங்கலாக பல அம்சங்களுடன் நெருக்கமாக இணைந்திருக்கின்றன. எமது நாட்டின் விவசாயத் துறை பிரதானமாக ஒப்புரவற்ற ஒரு வளர்ச்சியினால் வகுக்கப்படுகின்ற அரச நிதியிடும், ஊதாரியான ஒரு நிலையிலேயே தங்கியிருக்கின்றது. மேலும், காலநிலை சார்ந்த மாற்றம் மற்றும் மாறிவருகின்ற உலக சந்தை நிலைமைகள் என்பவற்றின் தாக்கங்களுக்கு அதிகளவில் பாதிக்கக்கூடிய சாத்தியம் அடங்கலாக புதிய மற்றும் சுழன்றுவருகின்ற வெளிக்கள அச்சுறுத்தல்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக, இலங்கை விவசாயத்திற்கு இறக்குமதி செய்யப் படும் உள்ளீடுகளிலும் தொழில்நுட்பத்திலும் மிகவும் அதிகளவில் தங்கியிருக்கின்றது.

விவசாயத் துறையை வலுப்படுத்த கடந்த காலமாக பல அரசாங்கங்கள் கணிசமான அபிவிருத்தி நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியிருந்தாலும், குறைந்த இலாபத்தினால் அது ஒரு அதிகளவில் இலாபமற்ற வணிகமாக மாறியுள்ளது. மேலும் பொருத்தமற்ற விவசாய செயன்முறைகளும் கூட சுற்றாடலுக்கும் மனித சுகாதாரத்திற்கும் கணிசமானளவு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளன. கொவிட்-19 தொற்றுநோய் நிலவரத்திற்கு மத்தியிலும் விவசாயத்தில் தற்போது பூகோள ரீதியான வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் உணவுப் பாதுகாப்பில் எதிர்நோக்கப்படுகின்ற சவால்களை அடையாளப்படுத்துவதற்குமான தெளிவான தூரநோக்குடைய கொள்கை சார்ந்த வழிகாட்டல்கள் மிக முக்கியமானவையாகும்.

ஒரு விவசாயத் தேசிய கொள்கையானது (தே.வி.கொ.) அநேகமாக விவசாயத் துறை தற்பொழுது எதிர்நோக்குகின்றதும் அதில் நிலவுகின்றதுமான அச்சுறுத்தல்கள்ளையும் பலவீனங்களையும் முற்றாக ஒழிப்பதற்கான சான்று-மைய கண்காணிப்பு, மதிப்பீட்டு முறையை பின்பற்றக்கூடிய பெறுபேறுகள்-மைய செயற்படுத்துகையை உள்ளடக்கியிருக்க வேண்டும். விவசாயக் கொள்கை வகுத்தமைப்பானது கமத்தொழில் அமைச்சு அனுசரிக்கின்ற வெளிப்படையான மற்றும் நன்கு ஒருங்கிணைந்த ஒரு பொறிமுறையின் ஊடாக பரந்த முறையான ஒரு நடபடிமுறையை பின்பற்ற வேண்டும். குறித்த நடபடிமுறையானது அமைச்சரவை அங்கீகரித்த ஒரு 'வளமான ஒளிமயமான' தேசிய கொள்கை வேலைச்சட்டகத்தில் இனங்காணப்பட்டுள்ள முக்கியமான விடய அம்சங்களை தெளிவாக கருத்திற்கொள்ளும். தேசிய விவசாயக் கொள்கையை (தே.வி.கொ.) வகுத்தமைக்கும் நோக்கத்தின் நிமித்தம் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் அடங்கிய ஒரு குழு, விவசாய-உணவு முறைமையிலுள்ள விவசாயிகளுடனும், ஏனைய முக்கியமான அக்கறையுடைய தரப்புகளுடனும், கல்விமான்களுடனும் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடனும் (சுயாதீனமானவர்களும் தேர்ந்தெடுத்த

நிறுவனங்களின் ஊழியர்களும்) சிவில் சமூகங்களுடனும், அபிவிருத்தி நிறுவனங்களுடனும், தனியார் துறையினருடனும் மற்றும் ஊடகவியலாளர்களுடனும் நாடளாவிய ரீதியில் கலந்துரை அமர்வுகளை நடத்தி, இந்த விடயத்தில் பரந்தளவில் பாடுபட்டுள்ளது.

இந்த முயற்சியானது விநியோக / பெறுமான சங்கிலி முறைமை முழுதிலுமுள்ள அக்கறையுடைய தரப்புகளையும் மற்றும் குறிப்பாக வறிய பின்தங்கிய விவசாயிகளின் நலனையும் பாதுகாக்கும் ஒரு நவீன விவசாயத் துறைக்கு அதாவது இலங்கையின் விவசாயத் துறையை நிலையாகப் பரிவர்த்தனை செய்யக்கூடிய வகையில் கொள்கை ஆக்கும் ஒட்டுமொத்த குறிக்கோளை அடைய உதவும் என நம்பப்படுகின்றது. இந்த தே.வி.கொ. சமூகத்தையும், பொருளாதாரத்தையும் மற்றும் சுற்றாடலையும் சென்றடையும் ஒட்டுமொத்த நன்மைகளை உறுதிப்படுத்தும் 10 கருப்பொருள் விடயங்களின் கீழ் வகுத்தமைக்கப்பட்டுள்ளது.

## நாடு பற்றிய குறிப்பு

2020 ஆம் ஆண்டு இரண்டாவது காலாண்டுப் பகுதியிலிருந்து இலங்கையின் பொருளாதாரம் கொவிட்-19 தொற்றுநோய் நிலவரத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதன் நடுப்பகுதியில், பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சியடைந்தது. ஆயினும், 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் கொவிட் இரண்டாம் அலை பாரியளவில் ஏற்பட்டதால் பொருளாதாரத்தில் மீண்டும் பின்னடைவு ஏற்பட்டது. பணவீக்கம் அதிகரித்தது. எவ்வாறாயினும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் அதிகரிப்பு ஏற்படவில்லை. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (மொ.உ.உ.) 2019 ஆம் ஆண்டில் 9,883,550 மில்லியன் இலங்கை ரூபா (இ.ரூ.) என்ற அளவிலும், 2020 ஆம் ஆண்டில் அது 9,530,606 மில்லியன் இலங்கை ரூபா (இ.ரூ.) என்ற அளவிலும் காணப்பட்டதாகவும், மேலும் இதனால் மொ.உ.உ. வளர்ச்சி வீதம், 2019 ஆம் ஆண்டில் 2.3% வீதமாக இருந்த சாதகமான வளர்ச்சியிலிருந்து 3.6% வீதம் வரை குறைவடைந்திருந்ததாகவும் இலங்கை குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களம் (கு.ம.பு.தி.) அறிவித்திருந்தது. நாட்டின் மூன்று பிரதான பொருளாதாரப் பிரிவுகளாக விளங்குகின்ற விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகியவற்றில், 2020 ஆம் ஆண்டு முறையே 2.4%, 6.9%, 1.5% வீதங்களினால் வீழ்ச்சி அடைந்திருப்பதாகப் பதிவாகியிருப்பது இதுவே வரலாற்றில் முதல் தடவையாகும். இலங்கை பற்றிய குறிப்புகள் கீழுள்ள 1 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 1. ஒரே பார்வையில் இலங்கை

| | |
|---|---|
| புவியியல் ரீதியான அமைவிடம் | இந்து சமுத்திரத்தில் வடக்கே $5^0$ 55’ - 9 51 அகலாங்குக்கும் மற்றும் $79^0$ 41’ - $81^0$ 53’ நெட்டாங்குக்கும் இடையே நாலாபக்கமும் கடலால் சூழப்பட்டு அமைந்திருக்கும் ஒரு தீவு |
| நிலப் பரப்பு | மொத்த நிலப் பரப்பு 65,610 கி.மீ.$^2$; மற்றும் உள்நாட்டு நீர்ப்பரப்பு 2,905 கி.மீ.$^2$ |
| கடல் பரப்பு | 1,340 கி.மீ.$^2$ |
| நிருவாகத் தலைநகரம் | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே |
| வணிகத் தலைநகரம் | கொழும்பு |
| கண்டம் | ஆசியா |
| சனத்தொகை | 21.9 மில்லியன் (2020) |
| அரச கரும மொழிகள் | சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் |
| காலநிலை | உலர்: வானிலை: ஆண்டு முழுதிலும் சூடும் குளிரும், நாடு மூன்று காலநிலை வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன ஈர வலயம் (ஈ.வ.; சராசரி ஆண்டு மழைவீழ்ச்சி >2,500 மி.மீ.), இடைவெப்ப வலயம் (இ.வ.; சராசரி ஆண்டு மழைவீழ்ச்சி 1,750-2,500 மி.மீ.) மற்றும் உலர் வலயம் (உ.வ.; சராசரி ஆண்டு மழைவீழ்ச்சி<1,750), மிதமான சராசரி ஆண்டு வெப்பநிலை 27 °C |
| விவசாயக் காலநிலை | நாடு ஏழு விவசாயக் காலநிலை வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 46 விவசாய சுற்றாடல் பிராந்தியங்கள் (வி.சு.பி.கள்) காணப்படுகின்றன. |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | அண்ணளவாக: 80 பில்லியன் அ.டொ. |
| மொத்த உள்நாட்டு உற்பத்திற்கு (மொ.உ.உ.) பொருளாதாரத் துறைகளின் பங்களிப்பு | விவசாயம் 7.0%, கைத்தொழில் 25.5%, சேவைகள் 58.7%, வரி குறைந்த மானியங்கள் 9.6% (2020; 2010 நிலையான விலைகள்) |
| விவசாய செயற்பாடுகளில் செயலாற்றுகை | *சாதகமான அதிகரிப்பு*: நவதானியங்களின் அதிகரிப்பு (அரிசி தவிர) 41.3%, நன்னீர் மீன்பிடி12.7%, மரக்கறி வகைகளின் அதிகரிப்பு 10.1%, பழ வர்க்கங்களின் அதிகரிப்பு 6.2%, அரிசியின் அதிகரிப்பு 5.7%, இறப்பரின் அதிகரிப்பு 4.6%, மற்றும் வாசனைப் பொருட்களின் அதிகரிப்பு 3.3% |

| | |
|---|---|
| | *வீழ்ச்சி*: கடல் மீன்பிடி 21.7%, தென்னை அடங்கலாக ஓலைப் பயிர்களின் அதிகரிப்பு 10.2%, வனவியல் மற்றும் மரம் வெட்டுதல் 8.1%, தேயிலை அதிகரிப்பு 7.1%, மற்றும் விலங்கு உற்பத்தி 4.9% |
| விவசாயத்திலுள்ள ஊழியர்படை | 23.73% ஊழியர்படை (2020) |

நாடு முழுதிலும் செயற்பாடுகள் மீள மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருவதாலும், மேலும் எல்லைக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வருவதாலும் உலகப் பொருளாதார வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் மீண்டும் முன்னைய நிலைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே நேரம் கொவிட்-19 விழிப்புணர்வின் பின்னர் சுற்றுலாவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகளும் மற்றும் உலகப் பொருளாதார செயற்பாடுகளும் வலுப்பெற்று வருவதாலும் மற்றும் தடுப்பூசி ஏற்றும் பிரச்சார நடவடிக்கைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாலும் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் கணிசமானளவில் வளர்ச்சி அடையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆ.அ.வ.) எதிர்வு கூறுகின்றது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் 4.1% வீதம் வரையும் அதே போல் 2022 ஆம் ஆண்டில் ஓரளவு அதாவது 3.6% வீதம் வரையும் அதிகரிக்கும் என ஆ.அ.வ. எதிர்வு கூறுகின்றது.

**கவனம் செலுத்தப்படும் முக்கிய பிரிவுகள்:**

தே.வி.கொ. பிரதானமாக இரண்டு பிரிவுகளில் கவனம் செலுத்துகின்றது. அத்தகைய பிரிவுகள் பின்வருமாறு:

1. உணவு மற்றும் தீவனப் பயிர்கள்
2. தரத்தில் உயர்ந்த உணவு உள்ளிட்ட நிலையான உணவுப் பாதுகாப்பு

**அடையாளப்படுத்தப்படும் காத்திரமான விடயங்கள்:**

தே.வி.கொ. அடையாளப்படுத்த வேண்டிய எட்டு (8) காத்திரமான விடயங்கள் பரந்த ஆலோசனை நடபடிக்கையின் ஊடாக இனங்காணப்பட்டன. அத்தகைய விடயங்கள் பின்வருமாறு:

1. பயிர் உற்பத்தியும் உற்பத்தித்திறன் மேம்பாடும்
2. சுயதேவைப் பூர்த்தி மற்றும் அடிப்படை உணவு மற்றும் தீவன தேவைகள் தாராளத்தன்மை
3. திட்டவட்டமான வளப் பாவனை
4. சந்தைப் போட்டித்தன்மை
5. காலநிலை நெகிழ்தன்மை
6. சகல இடர்களையும் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளையும் குறைத்தல்
7. பால்நிலையையும் இளைஞர்களையும் விவசாய வெள்ளோட்டத்தில் இணைத்தல்
8. கேந்திர மைய சுற்றுவட்டார உறவுகளை பேணுதல்

அக்கறையுடைய தரப்புகள் உடன்பட்டுள்ள தே.வி.கொ. தூரநோக்கு மற்றும் செயற்பணிக் கூற்று விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**தூரநோக்கு**:

தேசத்தை வளமாக்குவதற்கான நிலையான உணவுப் பாதுகாப்பு

**செயற்பணிக் கூற்று**:

உற்பத்தியாளர்களினதும் நுகர்வோரினதும் நலன்களை பாதுகாக்கும் அதே வேளையில் உலலாவிய ரீதியில் ஒரு போட்டித்தன்மை வாய்ந்த விவசாய உற்பத்தி, பதனிடுகை மற்றும் சந்தைப்படுத்தல் பொறிமுறையின் ஊடாக இலங்கையில் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடிய, ஒரு நிலையான சுற்றாடல்நேயமான உணவு முறைமையை ஏற்படுத்துதல்.

**கொள்கை நோக்கம்:**

செழிப்பும் சிறப்பும் என்ற குறிக்கோள்களுக்கு இணங்க சுற்றாடல்நேயமான ஒரு விவசாய சூழலில் இளைஞர்கள் மீது விஷேட கவனத்தை செலுத்தி விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தையும் மற்றும் சமூக அந்தஸ்த்தையும் உயர்த்தும் அதே வேளையில் வாழ்வாதார விவசாயத்திலிருந்து இறக்குமதிப் பிரதியீடு உள்ளிட்ட ஒரு கேள்வி மைய, தொழில்வாண்மை மற்றும் ஏற்றுமதி மைய விவசாயத்திற்கு நகர்ந்து முன்னுதாரணமாக மாறும் நோக்கத்தில் தே.வி.கொ. தயாரிக்கப்பட்டது. அதற்கிணங்க, அக்கறையுடைய தரப்புகள் உடன்பட்டுள்ளதன் அடிப்படையில் கீழே குறிப்பிடப் பட்டுள்ளவாறு இந்த தே.வி.கொ. அவதானிக்கவும் மற்றும் மதிப்பிடவும் கூடிய பன்னிரெண்டு (12) கொள்கைக் குறிக்கோள்களை அடைய எதிர்பார்க்கின்றது.

**கொள்கைக் குறிக்கோள்கள்**:

தே.வி.கொ. 2030 ஆம் ஆண்டளவில் பின்வரும் கொள்கைக் குறிக்கோள்களை அடைவதற்கு எதிர்பார்க்கின்றது.

(1) நிலையான, சுற்றாடல்நேய விவசாய செயன்முறைகளைப் பின்பற்றி வள உற்பத்தித் திறனை (2020 மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில்) இரட்டிப்பாக்கல்.

(2) விவசாயிகளின்/விவசாயத்திலுள்ள உற்பத்தியாளர்களின் பொருளாதார இலாபத்தை (2020 மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில்) இரட்டிப்பாக்கல்.

(3) விவசாய உணவு முறைமையின் பங்களிப்பை தேசிய பொருளாதாரத்தில் 15% வீதம் வரை அதிகரித்தல்.

(4) விவசாய உணவு சங்கிலி முறைமையின் ஊடாக உள்நாட்டு ரீதியில் அபிவிருத்தியாகும் தொழில்நுட்பத்தின் பிரயோகத்தை தற்போதைய நிலையிலிருந்து குறைந்த பட்சம் 50% வீத்தினால் அதிகரித்தல்.

(5) அதிக விளைச்சலை தருகின்ற தரத்தில் உயர்ந்த விதைகளையும் நடுகை மூலப்பொருள் உற்பத்தியையும் உள்நாட்டு ரீதியில் தேசிய தேவையில் 50% வீதத்தினால் அதிகரித்தல்.

(6) பயிர் உற்பத்தியில் சுற்றாடல்நேய உள்ளீடுகளின் பிரயோகத்தை, தேவையில் 100% வீதம் வரை அதிகரித்தல்.

(7) நாட்டின் உணவு மற்றும் தீவன கட்டுப்பாட்டு ஒழுங்விதிகளுக்கு இணங்க பாதுகாப்பான தரமான உணவு மற்றும் தீவன வகைகளை விநியோகித்தல்.

(8) சான்றிதழளித்தல், நியமப்படுத்தல் மற்றும் ஏனைய பொருட்கள் சேவைகள் நிமித்தம் உதவக்கூடிய அரசாங்கம் ஒழுங்குறுத்துகின்ற ஒரு உணவு மற்றும் தீவன கட்டுப்பாட்டு முறைமையைத் தாபித்தல்.

(9) வினைத்திறன் வாய்ந்த சந்தை முறைமைகள் இணைந்த விவசாய தொழில்வாண்மை ஆற்றலுடைய கமக்காரர்/விவசாய உற்பத்தியாளர் குழுக்களைத் தாபித்தல்.

(10) தீர்மானமெடுக்கும் நடபடிக்கையில் கமக்காரர்களின்/விவசாய உற்பத்தியாளர்களின் ஒரு கட்டமைந்த வகிபங்குடைய கட்டாய பங்குபற்றல் முறையைத் தாபித்தல்.

(11) காலநிலைக்கும் ஏனைய அனர்த்தங்களுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய ஒரு விவசாய உணவு முறைமையை இலங்கையில் நிர்மாணித்தல்.

(12) தீர்மானமெடுத்தலின் நிமித்தம் நிலைத்திருக்கும் வெளிப்படையான, பொறுப்புக்கூறும், பொறுப்பு வாய்ந்த ஒரு பங்குபற்றல் முறைமையைத் தாபித்தல்.

## கருப்பொருள் பிரிவுகளும் மற்றும் கொள்கைக் கூற்றுக்களும் (கூற்றுக்கள் தடித்த எழுத்துக்களில் காணப்படுகின்றன)

ஒவ்வொரு கருப்பொருள் விடயத்தின் கீழ் அக்கறையுடைய தரப்புக்கள் உடன்பட்டுள்ள பத்து (10) கருப்பொருள் பிரிவுகளும் பதினைந்து (15) கொள்கைக் கூற்றுக்களும் கீழே தரப்பட்டுள்ளன.

(1) *கருப்பொருள் பிரிவு*: பயிர் உற்பத்தியும் உற்பத்தித்திறனும்

**1. விவசாய சூழல் சாத்தியத்தை இணைத்து உணவு முறைமையை வலுப்படுத்தும் அதே வேளையில் நன்கு ஒழுங்கமைந்த ஒரு விவசாய உற்பத்தி முறைமையின் ஊடாக உணவு மற்றும் தீவன பயிர்களின் உற்பத்தியையும் மற்றும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துதல்.**

(2) *கருப்பொருள் பிரிவு*: உள்ளீடுகள் முகாமைத்துவம்

**2. பௌதீக உள்ளீடுகளின் நியாயமான பாவனைக்காக அவற்றின் விநியோகத்தையும் மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளையும் வலுப்படுத்தல்.**

**3. விவசாய சமூகத்தையும் மற்றும் சுற்றாடலையும் பாதுகாக்கும் அதே வேளையில் உள்ளீடுகளின் அனுகூலமான பாவனை மற்றும் தூரநோக்குடைய முகாமைத்துவம் ஆகியவற்றின் ஊடாக விளை நிலங்களின் உற்பத்தித்திறனையும் நிலைத்திருக்கும் தன்மையையும் மேம்படுத்துதல்.**

**4. நீர்ப்பாசன நீர்ப்பாவனை வினைத்திறனை மேம்படுத்தும் முகமாக பங்குபற்றல் முகாமைத்துவத்தினூடாக நீர்ப்பாசன நீரின் நியாயமான மற்றும் பகுத்தறிவாய்ந்த பாவைனயை மேம்படுத்துதல்.**

(3) *கருப்பொருள் பிரிவு*: உயர் தொழில்நுட்பங்கள்

**5. நிலையான விவசாய உற்பத்தியின் நிமித்தம் அறுவடைக்கு முந்திய மற்றும் அறுவடைக்குப் பிந்திய காலப் பகுதியில் பொருத்தமான புத்தாக்க திறன்களினதும் மற்றும் தொழில் நுட்பங்களினதும் அபிவிருத்தியையும் பிரயோகத்தையும் ஊக்குவித்தல்.**

(4) *கருப்பொருள் பிரிவு*: உணவுப் பாதுகாப்பும் தர முகாமைத்துவமும்

**6. மனிதனினதும் விலங்கினதும் சுகாதாரத்தை பாதுகாக்கும் நிமித்தம் தேசிய சர்வதேச நியமங்களின் அடிப்படையில் பாதுகாப்பானதும் மற்றும் தரத்தில் உயர்ந்ததுமான உணவு மற்றும் தீவன வகைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்.**

(5) *கருப்பொருள் பிரிவு*: சுற்றாடல்நேயமான செயற்பாடுகள்

**7. உயிரியல் சுற்றாடல் வசதிகளை பாதுகாக்கும் வேளையில் இயற்கை வளங்கள் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு ஊடாக விவசாய அபிவிருத்தியில் நிலைத்து இருக்கும் தன்மைக்கு உதவுதல்.**

(6) *கருப்பொருள் பிரிவு*: விவசாய தொழில்முயற்சியும் சந்தைகளும்

**8. உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் இலக்குக்கொள்கின்ற பெறுமதி சேர்ந்த உற்பத்திகளில் குறிப்பாக கவனத்தை செலுத்தி பெறுமான சங்கிலி முறைமையின் ஊடாக திறமுறைசார்ந்த கூட்டுறவை வளர்த்தல்.**

**9. தேசிய மற்றும் சர்வதேச தர நியமங்களுக்கு இணங்க பொருத்தமான உகந்த பொருட்கள் சேவைகள் அடங்கலாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை முறைமைகளை ஆராய்ந்து நெறிமுறைப்படுத்தல்.**

(7) *கருப்பொருள் பிரிவு*: உற்பத்தியாளர் ஊக்குவிப்பு

**10. விவசாய நிபுணத்துவ அறிவை பெற்றுக் கொள்ளல் மற்றும் பொருளாதார ரீதியில் சுயாதீனமாக விளங்கும் பொருட்டு உகந்த தீர்மானங்களை எடுத்தல் ஆகியவற்றின் நிமித்தம் விவசாயிகள் மற்றும் கிராமிய மக்கள் ஆகியோருக்கான பங்காளித்துவ மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சி திட்டங்களை வலுப்படுத்துதல்.**

**11. பொறிமுறையாக்கல், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்தித்திறன் மைய ஊக்குவிப்பு முறைமைகளுக்கான அணுகல் ஆகியவற்றுக்கான உதவி அடங்கலாக விவசாயத்தில் இளைஞர் யுவதிகளையும் மற்றும் பெண்களையும் ஊக்குவித்தல்.**

(8) *கருப்பொருள் பிரிவு*: காலநிலை நெகிழ்தன்மையும் ஏனைய இடர் முகாமைத்துவமும்

**12. விவசாய முறைமைகளின் காலநிலைக்கு ஈடுகொடுக்கும் தன்மையை அதிகரிக்கும் முகமாக தகுந்த தழுவல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் பின்பற்றலை ஊக்குவித்தல்.**

**13. திடீர் காலநிலை மாற்றங்களையும் மற்றும் ஏனைய அனர்த்தங்களையும் சமாளிக்கக் கூடிய வகையில் நகர மக்களையும் கிராமிய மக்களையும் ஒன்றிணைத்து உணவு முறைமைகளை வலுப்படுத்தல்.**

(9) *கருப்பொருள் பிரிவு*: அறிவு முகாமைத்துவமும் விவசாய விரிவாக்கலும்

**14. ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விவசாய விரிவாக்கல் முறைமைகள், விவசாயத் துறையுடன் சம்பந்தமான ஆட்சேர்ப்பு ஆகியவற்றை முகாமை செய்யும் பொருட்டு கேந்திர ரீதியில் கட்டுப்பாடுடைய ஒரு தகவல் அபிவிருத்தி மற்றும் தகவல் பரம்பல் முறைமையை தாபித்தல்.**

(10) *கருப்பொருள் பிரிவு*: நிருவாகமும் செயற்பாடுகள் முகாமைத்துவமும்

**15. நிலையான விவசாய அபிவிருத்தியின் நிமித்தம் பரந்த ஒரு அக்கறையுடைய தரப்புப் பங்குபற்றலைக்கொண்டு தேசிய மட்டத்திலும் மற்றும் உள்ளூர் மட்டத்திலும் கருத் திட்டங்கள் செயற்படுத்துகை, கண்காணிப்பு மதிப்பீடு ஆகியவற்றின் நிமித்தம் நிறுவனசார் கூட்டிணைந்த ஒரு பொறிமுறையை வலுப்படுத்தல்.**

ஒவ்வொரு கொள்கைக் கூற்றின் கீழும் அக்கறையுடைய தரப்புகள் இனங்கண்டுள்ள கொள்கை சார்ந்த செயற்பாடுகள் இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## கொள்கைக் கூற்றுக்களும் மற்றும் கொள்கை சார்ந்த செயற்பாடுகளும்
## (*குறிப்பு*: முன்னிலை நிறுவனம்/நிறுவனங்கள் தடித்த எழுத்துக்களில் காணப்படுகின்றன)

| **கருப்பொருள் பிரிவு** (1) | **பயிர் உற்பத்தியும் உற்பத்தித்திறனும்** | **அடைய வேண்டிய கொள்கைக் குறிக்கோள்கள்** | **நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான (நி.அ.கு.) இணைப்பு** | **பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள்** [1] |
|---|---|---|---|---|
| கொள்கைக் கூற்று | **1. விவசாய சுற்றுச்சூழல் சாத்தியத்தை இணைத்து உணவு முறைமையை வலுப்படுத்தும் அதே வேளையில் நன்கு ஒழுங்கமைந்த ஒரு விவசாய உற்பத்தி முறைமையின் ஊடாக உணவு மற்றும் தீவன பயிர்களின் உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துதல்.** | 1, 2, 3, 4 | 1, 2, 8, 12, 13, 14, 15 | **DOA, DAD, DAPH**, AAIB, SLCARP, HARTI, NFS, CFC, CCFC, NLDB, MLEL<br><br>PC & DS/GA<br><br>DOI, **MASL**, DOM<br><br>DWLC<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை, சர்வதேச ஆராய்ச்சி நிறுவகங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 1.1. சகல பயிர்களினதும் விவசாய முறைமைகளினதும் நிமித்தம் பொருத்தமான சுட்டிகளை இனங்காணும் அதே வேளையில் அத்தகைய சகல பயிர்களுக்கும், விவசாய முறைமைகளுக்கும் தேவையான மிகச்சிறந்த விவசாய செயன்முறைகள் (சி.வி.செ.) பற்றிய வழிகாட்டல்களைத் தயாரித்து, அவற்றை அங்கீகரித்து பின்பற்றுதல். | | | |
| | 1.2. தேவை மையப் பயிர்கள் முன்னுரிமைத் திட்டத்தையும் (தேசிய, மாகாண மட்டத் தேவைகள், சுற்றாடல் விடயங்கள்/விவசாயம் சார்ந்த சுற்றாடல், உற்பத்தித்திறன், முதலீட்டிற்கான வருவாய், ஏற்றுமதி) பயிர் வலயப்படுத்தல் முறையையும் பின்பற்றுதல். | | | |
| | 1.3. காலநிலை எதிர்வுகூறலின் அடிப்படையில் பொருத்தமான வேறுபாடுகள், உற்பத்தித் தொழில்நுட்பங்கள், விவசாய மைய ஆலோசனைகள் (AMAs) என்பவற்றைக்கொண்டு உற்பத்தித் திறனிலுள்ள தற்காலிக வித்தியாசத்தை குறைக்க தேவையான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல். | | | |
| | 1.4. சுமக்கக்கூடிய விலைகளில் கிடைக்கக்கூடிய பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குறைந்த உள்ளீடுகளை (உள்ளீடுகள்/நிலத்தின் உற்பத்தித்திறன் அதிகரிப்பு) கொண்டு அதிகளவு உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளைப் பின்பற்றுதல். | | | |
| | 1.5. உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களை குறைக்கவும் சரியான தெளிவான விவசாய முறைமைகளை (உ+ம்: உரப் பாவனையின் அதிக வினைத்திறனுக்கான புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் உரப் பயன்பாட்டு மைய மண் பரிசோதனை) பின்பற்றுதல். | | | |
| | 1.6. புதிய பொருத்தமான தொழில்நுட்ப/ பொறிமுறையாக்கலைப் பின்பற்ற உதவுதல். | | | |

[1] அட்டவணைகளின் இறுதியில் காணப்படும் சுருக்கப் பெயர்களை பார்க்கவும்

| | | | | |
|---|---|---|---|---|
| | 1.7. உணவு முறைமைகளில் ஒருமுகப்படும் காலநிலை நேர்த்தி-விவசாய (கா.நே.வி.) தலையீடு சார்ந்த நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் வலுப்படுத்தல். | | | |
| | 1.8. புதிய உற்பத்தி உருவாக்கத்திற்கும் பிரயோகத்திற்கும் (உ+ம்: வித்தியாசமான வகைகள், உற்பத்திப் பொதிகள் முதலினய) உதவுதல். | | | |
| | 1.9. சுற்றாடல்சார் முறைமையின் (நிலையான முகாமைத்துவம்-விவசாய, இயற்கை சுற்றாடல் தாக்கங்களை குறைத்தல்) காவு கொள்திறன் அடிப்படையில் வனசீவராசிகளை பரிபாலித்தல்) மற்றும் அத்தகைய வனவிலங்குகள் தொகையை விஞ்ஞான ரீதியில் வலுவாக கட்டுப்படுத்தி அவை மீதான தாக்கங்களை குறைத்தல். | | | |
| | 1.10. ஏற்கெனவேயுள்ள பண்ணை அலகுகளின் உற்பத்தித்திறனை (சிறு விவசாய பண்ணை உரிமையாளர்களுக்கான உத்தரவாத நிதி உதவியைக் கொண்டு) அதிகரித்தல். | | | |
| | 1.11. விவசாய உற்பத்திற்கும் அதன் உற்பத்தித்திறனுக்கும் உதவும் முகமாக குறைந்த வட்டியிலான கடன் திட்டங்களை (கடன்) அறிமுகப்படுத்துதல். | | | |
| | 1.12. இயந்திரங்களின் பயன்பாட்டின் நிமித்தம் தனியார்-பொது-உற்பத்தியாளர் பங்காளித்துவங்களை (த.பொ.உ.ப.) தாபித்தல். | | | |
| | 1.13. செய்யும் முதலீட்டிற்கு அதிக வருமானத்தை பெற்றுத்தருகின்ற பயிரிடும் முறைமைகளையும் பயிரிடும் மாதிரிகளையும் ஊக்குவித்தல். | | | |
| | 1.14. முறையான வீட்டுத்தோட்டப் பயிர் வளர்ப்பை ஊக்குவித்தலும் உதவுதலும். | | | |
| | 1.15. நகரப்புற மற்றும் புறநகர் உணவு முறைமைகள், மெட்ரோ விவசாயம் ஆகியவற்றில் குறிப்பான கவனத்தை செலுத்தி வித்தியாசமான உற்பத்தித் தொழில்நுட்பங்களை (உ+ம்: நேர் நடுகை விவசாயப் பண்ணை, குடும்ப விவசாயப் பண்ணை, கூரைமேல் பயிர்த் தோட்டம், சமூகப் பயிர்த் தோட்டங்கள்) ஊக்குவித்தல். | | | |
| | 1.16. சகல அக்கறையுடைய தரப்புகளுடனும் கலந்தாலோசனை செய்த பின்னர் முன்னுரிமைப் பயிர்களுக்கான ஒரு தேசிய பயிரிடும் திட்டத்தைத் தயாரித்து செயற்படுத்துதல். | | | |

| கருப்பொருள் பிரிவு (2) | | உள்ளீடுகள் முகாமைத்துவம் | அடைய வேண்டிய கொள்கைக் குறிக்கோள்கள் | நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான (நி.அ.கு.) இணைப்பு | பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|
| கொள்கைக் கூற்று | **2.** | **பௌதீக உள்ளீடுகளின் நியாயமான பாவனைக்காக அவற்றின் விநியோகத்தையும் மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளையும் வலுப்படுத்துதல்.** | 1, 2, 3, 4 | 1, 2, 12, 13, 14, 15 | **DOA,** DAD, HARTI, NFS, CFC, CCFC,<br><br>PC & DS/GA<br><br>தனியார் துறை, அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 2.1. | விதை சான்றுபடுத்தும் நடபடிமுறை சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு போதியளவு நிதிகளை ஒதுக்குதல். | | | |
| | 2.2. | சுமக்கக்கூடிய விலைகளில் விதைகளும் நடுகை மூலப்-பொருட்களும் அடங்கலாக தரமான உள்ளீடுகளை உற்பத்தி செய்தலும்/அல்லது அத்தகைய உள்ளீடுகளை உரிய கால நேரத்திற்கு விநியோகித்தலும். | | | |
| | 2.3. | உரிய காலநேரத்திற்கு தரமான நியம விதைகளும் நடுகை மூலப்பொருட்களும் கிடைப்பதை உறுதிசெய்யும் பொருட்டு த.பொ.ப. ஊடாக ஒரு பொறிமுறையைத் தாபித்தல். | | | |
| | 2.4. | விதை சான்றுபடுத்தும் நடபடிமுறையை மாகாண மட்டத்தில் பன்முகப்படுத்தி வலுப்படுத்துதல். | | | |
| | 2.5. | த.பொ.ப. ஊடாக இயந்திராதிகளை விநியோகிக்கும்/இயந்திர சேவைகளை வழங்கும்/ இயந்திராதிகளை வாடகைக்கு விடும் நிலையங்களை பிராந்திய மட்டத்தில் தாபித்தல். | | | |
| | 2.6. | பாரம்பரிய மூலவுயிர்முதலுருவின் பாதுகாப்புக்கும் மற்றும் பயன்பாட்டிற்கும் கிராமிய மட்ட விதைக் களஞ்சியங்களைத் தாபித்தல். | | | |
| | 2.7. | இலங்கையில் விவசாய இயந்திராதிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யவும் மற்றும் விவசாயக் கருவிசாதனங்களை மேலும் மேம்படுத்தவும் தனியார் துறை முதலீட்டு வசதிகளை ஊக்குவித்தல். | | | |
| | 2.8. | இலங்கையில் பயன்படுத்த வேண்டிய இயந்திராதிகளையும் மற்றும் ஏனைய விவசாய உள்ளீடுகளையும் சான்றுபடுத்தும் ஒரு பொறிமுறையை (உ+ம்: விவசாய உள்ளீடுகளுக்கான ஒரு கேந்திர ஒழுங்குறுத்துகை நிலையம்) தாபித்தல். | | | |
| | 2.9. | தேசிய அளவில் தேவைகளை பூர்த்திசெய்துகொள்வதற்கு உர உற்பத்தி, தாவர ஊக்கிகள் மற்றும் மண் வளப்படுத்திகள் என்பவற்றுக்கான பொறிமுறையை/முறைமையை தாபித்தல். | | | |
| | 2.10. | உர நியமப்படுத்தல் நடைமுறையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தாபிக்கவும், அத்தகைய நடவடிக்கைகளை மீளாய்வுசெய்து, மதிப்பிட்டு சிபாரிசு செய்யவும் வழமையான காலப்பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | | | |
| | 2.11. | சேதன/உயிரியல் உர உற்பத்திற்கான ஒரு ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகத்தை நடைமுறைப்படுத்துதல். | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2.12. | அந்த தொழில்நுட்பங்களின் அணுகலுக்கும் பிரயோகத்திற்கும் (அத்தகைய தொழில்நுட்பத்தை அணுகுவதிலும் மற்றும் பயன்-படுத்துவதிலும் ஒரு கொத்தணி அணுகுமுறை) அவசியம் எனும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிமித்தம் FOs, FPOs மற்றும் FPCs என்பவற்றுக்கு அதிகாரம் அளித்தல். | | | |
| | 2.13 | தரம் உத்தரவாதப்பட்டுள்ள உர உற்பத்தியில்/இறக்குமதியில் மற்றும் பகிர்ந்தளிப்பில் சம்பந்தப்படுகின்ற பொறிமுறையை (நிறுவனசார் பொறிமுறை) வலுப்படுத்துதல். | | | |
| | 2.14 | ஒழுங்கமைந்த மிகத்திறமையான தொழிலை வழங்குவதற்கும், விவசாயத்தில் இணைவதற்குமான ஒரு பொறிமுறையைத் தாபித்தல். | | | |
| | 2.15 | விவசாய உள்ளீடுகளின் உற்பத்தியிலும், இறக்குமதியிலும், பாவனையிலும் கடும் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல். | | | |
| கொள்கைக் கூற்று | **3** | **விவசாய சமூகத்தையும் சுற்றாடலையும் பாதுகாக்கும் அதே வேளையில் உள்ளீடுகளின் அனுகூலமான பாவனை மற்றும் தூரநோக்குடைய முகாமைத்துவம் ஆகியவற்றின் ஊடாக விளை நிலங்கள் உற்பத்தித்திறனையும் நிலைத்திருக்கும் தன்மையையும் மேம்படுத்துதல்.** | 1, 2, 3, 4 | 1, 2, 12, 13, 14, 15 | **DOA**, **DAPH**, DAD, SLCARP, HARTI, NFS,<br>CFC, CCFC, NLDB, MLEL, NADSA, HADABIMA<br><br>PC & DS/GA<br><br>DOI, **MASL**, DOM<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை, சர்வதேச ஆராய்ச்சி நிறுவகங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 3.1. | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதைகளினதும் நடுகை மூலப்பொருட்களினதும் பாவனையை ஊக்குவித்தல். | | | |
| | 3.2. | அதிகளவான உற்பத்தித்திறனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் உரத்தின் பாவனையை மேலும் அனுகூலப்படுத்த தேவையான நடவடிக்கைகளைப் பின்பற்றுதல். | | | |
| | 3.3. | போஷனைகளின் பாவனை வினைத்திறனையும் (NUE) உரப் பாவனை வினைத்திறனையும் (FUE) அதிகரிப்பதற்கான புதிய உகந்த தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி அத்தகைய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல். | | | |
| | 3.4. | தாவரப் போஷனைகளின் பிரயோகத்திற்கு உதவும் முகமாக ஒரு உற்பத்தித்திறன் மைய முன்னுரிமை அடிப்படையிலான ஊக்குவிப்புப் பொறிமுறையைப் பின்பற்றுதல். | | | |
| | 3.5. | அனைத்துத் துறைகளிலிருந்தும் உர மானியத்தை படிப்படியாக பிரதியிடுவதற்கு தேவையான ஊக்குவிப்பு அடிப்படையிலான பொறிமுறையை அறிமுகப்படுத்துதல். | | | |
| | 3.6. | உயிரியல் சார் சுற்றாடல் வசதிகளைப் பாதுகாக்கும் முகமாக ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகளை செயற்படுத்துதல். | | | |
| | 3.7. | கமநல சேவை நிலையங்களையும் கமக்காரர் கூட்டுறவு அமைப்புகளையும் ஈடுபடுத்துவதன் அல்லது கிருமிநாசிகள் கடைகளை தாபிப்பதன் மூலமாக கிருமிநாசினிகள் சிபாரிசு, விற்பனை மற்றும் பாவனை முறையொன்றைப் பின்பற்றுதல். | | | |
| | 3.8. | தாவரங்கள் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களின் பலவகைப் பாவனையின் நிமித்தம் உதவுவதற்கு ஒன்றிணைந்த/களைக் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கட்டுப்பாட்டு அணுகுமுறைகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு முறைமையைத் தாபித்தல். | | | |
| | 3.9. | உகந்த நவீனமான சுற்றாடல்நேய பூச்சி/களைக் கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பங்களை (உயிர் பூச்சிக்கொல்லிகள்/தாவரவியல் முறைகள்/வேட்டையாடும் பூச்சிகள் முதலியன அடங்கலாக) அறிமுகப்படுத்தி அவற்றின் பாவனையை ஊக்குவித்தல். | | | |
| | 3.10. | பொருத்தமான ஒரு ஊக்குவிப்புப் பொதியை வழங்கி கரிம சீரமைப்புகளைக் கொண்டு நில அளவை அதிகரிப்பதற்கான திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்துதல். | | | |
| | 3.11. | உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கும் தெளிவான உகந்த விவசாய முறைமைகளை (உ+ம்: அதிக உரப் பாவனை வினைத் திறன், உரப் பாவனை மைய மண் பரிசோதனை) அறிமுகப் படுத்தி அவ்றறின் பாவனையை அதிகரித்தல். | | | |
| | 3.12. | சுற்றாடல்நேயமான விவசாய உற்பத்திகளின் பாவனை மற்றும் முகாமைத்துவ நுட்பங்கள் தொடர்பான நவீன அபிவிருத்திகள் தொடர்பாக விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்கள், ARPAs ஆகியோரின் நிமித்தம் தொடர்ச்சியான தொழில் அபிவிருத்தி (தொ.தொ.அ.) நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல். | | | |
| | 3.13. | விவசாய உற்பத்தியிலிருந்து கைவிடப்பட்டுள்ள நிலங்களின் அளவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை பின்பற்றுதல். | | | |
| | 3.14. | ஒரு சமூக மதிப்பாய்வு முறைமையை விவசாயத்தில் அனைத்து ஊக்குவிப்பு அடிப்படையிலான கருத்திட்டங்களிலும் நிகழ்ச்சித் திட்டங்களிலும் கட்டாய செயற்பாடாக நடைமுறைப்படுத்தல். | | | |
| | 3.15. | விவசாய வணிக முயற்சிகள், பொருத்தமான பொருளாதார ஊக்குவிப்புகள் ஆகியவற்றின் மூலம் கமக்காரர் கொத்தணி அணுமுறையைப் பின்பற்றச்செய்து விவசாய கைத்தொழில் வலயங்களைத் தாபித்தல். | | | |
| | 3.16. | கொத்தணி அணுகுமுறையின் அடிப்படையில் பொருளாதார ஊக்குவிப்பு வசதிகளை பெற்றுக் கொடுத்தல். | | | |
| கொள்கைக் கூற்று | **4.** | **நீர்ப்பாசன நீர்ப்பாவனை வினைத்திறனை மேம்படுத்தும் முகமாக பங்குபற்றல் முகாமைத்துவத்தினூடாக நீர்ப்பாசன நீரின் நியாயமான மற்றும் பகுத்தறிவாய்ந்த பாவனயை மேம்படுத்துதல்.** | 1, 2, 3, 4 | 1, 2, 6, 12, 13, 14, 15 | **DOA**, DAD, SLCARP, HARTI<br><br>PC & DS/GA<br><br>**DOI, MASL**, DOM<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தனியார் துறை, சர்வதேச ஆராய்ச்சி நிறுவகங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 4.1. | நிலகீழ் நீரின் மேலதிகப் பாவனையை தவிர்த்துக்கொள்வதற்கு சரியான உகந்த ஒழுங்குறுத்துகை செயல்நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | | | |
| | 4.2. | விவசாய நோக்கங்களின் நிமித்தம் மழைநீர் சேகரிக்கின்ற செயற்பாட்டை ஊக்குவித்தல். | | | |
| | 4.3. | பொருத்தமானவாறு விவசாயசார் சுற்றாடல்களில் நீர்ப்பாசன நீரின் உற்பத்தித்திறனை அதிகரிக்க சொட்டு நீர்ப்பாசனம் போன்ற நீர் சேமிப்புத் தொழில்நுடபங்களைப் பின்பற்றுதல். | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4.4. மண்ணரிப்பையும் மற்றும் நிலச் சிதைவையும் கட்டுப்படுத்த மண் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுதல். | | | |
| | 4.5. மண் பாதுகாப்பு பற்றிய சட்டத்தை வினைத்திறன் வாய்ந்ததாக செயற்படுத்தி நீரேந்துபரப்பு முகாமைத்துவ செயல்முறைகளை பின்பற்றுதல். | | | |
| | 4.6. எஞ்சிய ஈரப்பதனை பயன்படுத்தி வயல் நிலங்களில் மூன்றாம் பருவகாலப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல். | | | |
| | 4.7. விவசாய நிலங்களுக்கான வினைத்திறன் வாய்ந்த நீர்ப்பாசன நீர்விநியோகத்தை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு நிரல் முகவர்நிலையங்களின் உதவிகள் உடன் நீர்த்தேக்கங்களையும் நீர்ப்பாசன முறைமைகளையும் புனரமைத்தல். | | | |
| | 4.8. நீர்த்தேக்கங்களில் இடம்பெறும் மீன்பிடியை உறுதிசெய்வதற்கு சம்பந்தப்படும் சகல உள்நாட்டு அமைப்புகளின்/சங்கங்களின் கூட்டொத்துழைப்புடனும் ஒருங்கிணைப்புடனும் அத்தகைய மீன்பிடி செயற்பாடுகளை ஒன்றிணைத்தல். | | | |

| **கருப்பொருள் பிரிவு** (3) | **உயர் தொழில்நுட்பங்கள்** | **அடைய வேண்டிய கொள்கைக் குறிக்கோள்கள்** | **நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான (நி.அ.கு.) இணைப்பு** | **பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள்** |
|---|---|---|---|---|
| கொள்கைக் கூற்று | **5. நிலையான விவசாய உற்பத்தியின் நிமித்தம் அறுவடைக்கு முந்திய மற்றும் அறுவடைக்குப் பிந்திய காலப் பகுதியில் பொருத்தமான புத்தாக்க திறன்களினதும் மற்றும் தொழில் நுட்பங்களினதும் அபிவிருத்தியையும் பிரயோகத்தையும் ஊக்குவித்தல்.** | 1, 2, 3, 4, | 1, 2, 8, 9, 12, 13, 14, 15 | **DOA, NIPHM, DAPH**, PMB, NFPB, SLCARP<br><br>PC & DS/GA<br><br>DI, **MASL**, DOM<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தனியார் துறை, அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 5.1. தொழில்நுட்ப அபிவிருத்தி நிமித்தம் சகல அக்கறையுடைய தரப்புகளையும் பயனுள்ளதாக ஈடுபடுத்த முறையான நன்கு ஒருங்கிணைந்த ஒரு பொறிமுறையைத் தாபித்தல். | | | |
| | 5.2. உள்நாட்டில் கிடைக்கக்கூடிய வளங்களை பயன்படுத்தி செலவு பயனுள்ள தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்யும் நிமித்தம் நிதி மற்றும் நிறுவன சார் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல். | | | |
| | 5.3. பயிர் உற்பத்தி எதிர்வுகூறும் முறைமையை தேசிய மற்றும் சர்வதேச அபிவிருத்திப் பங்காளிகளின் உதவியைக் கொண்டு இற்றைப்படுத்துதல். | | | |
| | 5.4. விரைவாக அழிந்து போகக்கூடிய பொருட்களுக்கு பெறுமானம் சேர்க்கும் நடபடிக்கையில் இலக்குக்கொள்ளும் தொழில்நுட்பப் பிரயோகத்தை ஊக்குவித்தல். | | | |
| | 5.5. அறுவடைக்குப் பிந்திய காலத்தில் தரத்தை மேம்படுத்தும் முகமாக பொதியிடுகை அடங்கலாக சரியான அறுவடைக்கு | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | முந்திய மற்றும் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களைப் பிரயோகித்தல். | | | |
| | 5.6. | தொழில்நுட்பப் பரிமாற்றல் பொறிமுறைகளை சரியான பொருத்தமான பொறிமுறைகளின் ஊடாக வலுப்படுத்தல். | | | |
| | 5.7. | ஒரு விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி/விரிவாக்கல் சபையை தாபிப்பதில் கவனம் செலுத்துவதற்கு, விவசாய ஆராய்ச்சிக்கு பொறுப்புடைய ஏற்கெனவேயிருக்கின்ற அதிகார சபைகளை மீளாய்வு செய்து மறுசீரமைத்தல். | | | |
| | 5.8. | ICT மைய விவசாயப் பாவனையை ஊக்குவிப்பதற்கு உரிய பொறிமுறைகளைப் பின்பற்றுதல். | | | |
| | 5.9. | நிரூபனமான உகந்த தொழில்நுட்பத்தை கள சரிபார்த்தலின் ஊடாக அறிமுகப்படுத்துதல். | | | |
| | 5.10. | மேற்குறித்த 3.11 இற்கான இணைப்பு | | | |

| **கருப்பொருள் பிரிவு** (4) | | **உணவுப் பாதுகாப்பும் தர முகாமைத்துவமும்** | **அடைய வேண்டிய கொள்கைக் குறிக்கோள்கள்** | **நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான (நி.அ.கு.) இணைப்பு** | **பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள்** |
|---|---|---|---|---|---|
| கொள்கைக் கூற்று | **6.** | **மனிதனினதும் விலங்கினதும் சுகாதாரத்தை பாதுகாக்கும் நிமித்தம் தேசிய சர்வதேச நியமங்களின் அடிப்படையில் பாதுகாப்பானதும் மற்றும் தரத்தில் உயர்ந்ததுமான உணவு மற்றும் தீவன வகைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்.** | 5, 6 | 1, 2, 3, 12, 13, 14, 15 | **FCA, SLSI**<br><br>**DOA, DAPH,** SLCARP, HARTI, NFS,<br><br>MASL<br><br>PC & DS/GA<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை, சர்வதேச ஆராய்ச்சி நிறுவகங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 6.1. | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களிலும் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களிலும் உணவு, தீவனம் ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதிசெய்யும் முகமாக சரியான ஒழுங்குவிதிகளைத் தயாரித்து (சுகாதார அமைச்சின் ஆலோசனையிலும் கூட்டொத்துழைப்பிலும்) பின்பற்றுதல். | | | |
| | 6.2. | GAP/இயற்கை விவசாயம்/சூழலியல் விவசாயம் ஆகியவற்றின் பிரயோகத்தை ஊக்குவித்தல். | | | |
| | 6.3. | வலுவான சோதனை முறைமைகளின் மூலமாக உணவு மற்றும் தீவன தர நியமங்களை (தரக் கட்டுப்பாடு) கண்காணிப்பதற்கு நவீன ஆய்வுகூடங்களைத் தாபித்தல். | | | |
| | 6.4. | உணவுப் பாதுகாப்பு தர நியமங்களை தயாரித்து (சுகாதார அமைச்சு, இ.நி.க.நி. ஆகியவற்றின் உதவியுடன்) கடுமையாக பின்பற்றுதல். | | | |
| | 6.5. | உணவு உற்பத்தியின் தரத்தை கட்டுப்படுத்தும் தர நியம செயல்முறை நடவடிக்கைகளை (சுகாதார அமைச்சு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு/இ.நி.க.நி., மற்றும் ஏனைய நிரல் முகவர் நிலையங்கள் என்பவற்றின் உதவியுடன்) பின்பற்றுதல். | | | |
| | 6.6. | சமூக விழுமிய முறைமையை கருத்திற்கொண்டு குறிப்பாக போஷனை மற்றும் பாதுகாப்பு ஆகிய அம்சங்களில் கவனத்தை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தி உணவு உற்பத்திகளுக்கு லேபலிடும் கடுமையான ஒரு முறைமையைப் பின்பற்றுதல். | | | |
| | 6.7. நுகர்வோருக்கு தரமான உணவு உற்பத்திகளை வழங்குவதில் சிறு உரிமையாளர் சந்தை அணுகுபிரவேசம், சுற்றாடல்நேய விவசாய உற்பத்திகள், உள்நாட்டு உணவு மூலம் என்பவற்றை ஊக்குவிக்கும் அதே வேளையில் கிராமிய சந்தை / விவசாயிகள் சந்தை முறைமையை மீளாய்வு செய்தல். | | | |
| | 6.8. பாரம்பரியமற்ற உணவு வளங்கள் பாவனையை ஊக்குவித்தல். | | | |

| **கருப்பொருள் பிரிவு** (5) | **சுற்றாடல்நேய செயற்பாடுகள்** | **அடைய வேண்டிய கொள்கைக் குறிக்கோள்கள்** | **நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான (நி.அ.கு.) இணைப்பு** | **பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள்** |
|---|---|---|---|---|
| கொள்கைக் கூற்று | **7. உயிரியல் சுற்றாடல் வசதிகளை பாதுகாக்கும் வேளையில் இயற்கை வளங்கள் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு ஊடாக விவசாய அபிவிருத்தியில் நிலைத்து இருக்கும் தன்மைக்கு உதவுதல்.** | 1, 2, 5, 6 | 1, 2, 3, 7, 8, 12, 13, 14, 15 | **DOA, DAD**, DAPH, SLCARP, HARTI<br><br>PC & DS/GA<br><br>DOI, **MASL**<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை, சர்வதேச ஆராய்ச்சி நிறுவகங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 7.1. சுற்றாடல் சார்ந்த பாதுகாப்பு நிமித்தம் உதவுவதற்கு விவசாய உயிரியல் சுற்றாடல் முறைமைகள் முழுதிலும் சுற்றாடல்நேய விவசாய செயல்முறைகளை அறிமுகப்படுத்திப் பின்பற்றுதல். | | | |
| | 7.2. பாரம்பரிய மூலவுயிர்முதலுருவை பயன்படுத்தி ஒருமுகமான இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்களைத் தாபிப்பதன் ஊடாக உள்நாட்டில் மேம்பட்ட விதைகள், நடுகை மூலப்பொருட்கள் கிடைப்பதை உறுதிசெய்தல். | | | |
| | 7.3. குறிப்பாக இயற்கை விவசாயத்தில் கவனம் செலுத்தி அந்தப் பாரம்பரிய மூலவுயிர்முதலுருவை பாதுகாப்பதற்கும் அதன் நிலையான பயன்பாட்டிற்கும் கிராமிய மட்டத்தில் விதைக் களஞ்சியங்களைத் தாபித்தல். | | | |
| | 7.4. விளை நிலத்தின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் சுற்றாடல் முறைமை வசதிகளைப் பாதுகாக்கவும் சுற்றாடல்நேய நவீன உள்ளீட்டு முகாமைத்துவ நுட்பங்களை (மண் பரிசோதனை மைய உரப் பாவனை, பூச்சிகளையும் மற்றும் பீடைகளையும் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கட்டுப்படுத்துவதற்கு உயிர்-பூச்சிக்கொல்லிகள்/ தவாரவியல் முறை/வேட்டையாடும் பூச்சிகள் என்பவற்றின் பாவனை அதே போல் சேதனப் பொருட்களின் பிரயோகம்) அறிமுப்படுத்திப் பின்பற்றுதல். | | | |
| | 7.5. | இலங்கையில் சுற்றாடல்நேயமான விவசாய செயற்பாடுகளை ஊக்குவிப்பதில் பன்னாட்டு முகவர்நிலையங்களின் கட்டாய ஈடுபாட்டுடன் ஒரு பொறிமுறையைப் பின்பற்றுதல். | | | |
| | 7.6. | NPQS நிலையத்தில் கிடைக்கக்கூடிய வசதிகளை வலுப்படுத்தி கடுமையான தாவரங்கள் தொற்றுநீக்கும் நடவடிக்கைகளை பின்பற்றுதல் அத்துடன் சம்பந்தப்படுகின்ற ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துதல். | | | |
| | 7.7. | புதிய பூச்சிகள் உருவாகுதல் மற்றும் பூச்சிகளின் மீளெழுச்சி பற்றிய முன்னறிவிப்பின் நிமித்தம் நன்கு கட்டமைந்த ஒரு கண்காணிப்பு முறைமையைப் பின்பற்றுதல். | | | |
| | 7.8. | விவசாயத்தில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பாவனையை அதிகரிக்க பொருத்தமான நடவடிக்கையை எடுத்தல் - (உ+ம்: சூரிய சக்தி அணுகலுக்கான நிதி சார்ந்த ஊக்குவிப்புகள், நீர்ப்பாசனத்திற்கான காற்று சக்தித் தொழில்நுட்பம்/மின் கல சக்தித் தொழில்நுட்பம், வெப்பநிலை, RH கட்டுப்பாடுடைய களஞ்சிய முறைமைகள்) மற்றும் உயிர் எரிவாயுட்களைப் பயன்படுத்துதல். | | | |
| | 7.9. | சாத்தியமானவாறு பயிர்-விலங்குக் கலப்பு வேளாண்மையின் மூலம் விவசாய முறைமைகளை ஊக்குவித்தல். | | | |
| | 7.10. | நாட்டிலுள்ள பல்லினத்துவத்தையும் மற்றும் அதன் நிலையான பயன்பாட்டையும் பாதுகாப்பது அடங்கலாக சுற்றாடல் தர மற்றும் பாதுகாப்பு நியமங்களை விவசாய செயல்முறைகள் அனுசரிக்கின்றனவா என்பதை உறுதிசெய்துகொள்வதற்கான பொறிமுறைகளைப் பின்பற்றுதல். | | | |

| **கருப்பொருள் பிரிவு** (6) | | **விவசாய தொழில்முயற்சியும் சந்தைகளும்** | **அடைய வேண்டிய கொள்கைக் குறிக்கோள்கள்** | **நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான (நி.அ.கு.) இணைப்பு** | **பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள்** |
|---|---|---|---|---|---|
| கொள்கைக் கூற்று | **8.** | **உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் இலக்குக் கொள்கின்ற பெறுமதி சேர்ந்த உற்பத்திகளில் குறிப்பாக கவனத்தை செலுத்தி பெறுமான சங்கிலி முறைமையின் ஊடாக திறமுறைசார்ந்த கூட்டுறவை வளர்த்தல்.** | 3, 4, 7 | 1, 2, 5, 8, 9, 10, 12, 13, 14, 15 | **DOA**, **NIPHM, DAPH**, DAD, PMB, SLCARP, HARTI, NFS, CFC, CCFC, NLDB, MLEL, NADSA<br><br>PC & DS/GA<br><br>MASL |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 8.1. | பயனுள்ள ஒரு விவசாய தொழில்முயற்சி வளத் திட்டத்தை (ERP) தயாரித்தல் - சுற்றாடல் தாக்க பகுப்பாய்வினதும் மற்றும் பொருளாதார நிதிப் பகுப்பாய்வினதும் ஊடாக தேசிய மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல்/அறிவு, காலநிலை/வானிலை தகவல் உள்ளடங்கிய முறைமைகள் அணுகுமுறை. | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 8.2. | ஒரு சந்தை மைய உற்பத்தி முறைமையை தாபித்தல். | | | கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை, சர்வதேச ஆராய்ச்சி நிறுவகங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் |
| | 8.3. | கமநல சேவை நிலையங்களினதும் DEC களினதும் ஊடாக ஒரு சந்தைப்படுத்தல் வலையமைப்பைத் தாபித்தல். | | | |
| | 8.4. | சி.வி.செ. ஐ பின்பற்றும் உற்பத்தியாளர்களுக்கு அதிகளவான வருவாயையும் இலாபங்களையும் உறுதிசெய்வதற்கான ஒரு பொறிமுறையைத் தாபித்தல். | | | |
| | 8.5. | பிரதான உயிர் உற்பத்திகளுக்கு ஒரு குறைந்தபட்ச விலையை நிர்ணயித்துப் பின்பற்றுதல். | | | |
| | 8.6. | உள்ளீடு சார்ந்த ஆகுசெலவுகளை குறைக்கும், இலாபங்களை அதிகப்படுத்தும், கமக்காரர் உற்பத்தியாளர் அமைப்புகளை பொருளாதார அலகுகலாக வலுப்படுத்தும் நோக்கங்களைக் கொண்டு கமக்காரர் உற்பத்தியாளர்கள் முகாமை ஆற்றலை மேம்படுத்துதல் மற்றும் விதை நிதிகளை பெற்றுக்கொடுத்தல். | | | |
| | 8.7. | பாரம்பரிய மூலவுயிர்முதலுருவிலிருந்து உருவாக்கப்படும் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான முக்கிய சந்தைகளை இனங்காணுதல். | | | |
| | 8.8. | உள்நாட்டு சந்தையிலும் வெளிநாட்டு சந்தையிலும் ஒருமுகப் படுகின்ற பெறுமானம் சேர்த்தல் பற்றி, FOs/FPOs, SMEs மற்றும் ஏற்கெனவேயுள்ள சந்தைத் தரப்புகள் (மாவட்ட மட்டத்திலான கமக்காரர் சம்மேளனங்கள்) முதலியவற்றின் ஆற்றல்களை வளர்த்தல். | | | |
| | 8.9. | விவசாயம் செய்பவர்களின் ஈடுபாட்டின் ஊடாக பல வகை சந்தைகளுடன் இணைப்பதற்கு முன்னுரிமைப் பயிர்களின் பெறுமான சங்கிலியை உருவாக்கி வலுப்படுத்துதல். | | | |
| | 8.10. | பதிவு செய்துள்ள சந்தைத் தரப்புகளுக்கு ஒரு இலக்கு மைய விநியோக சங்கிலி முகாமைத்துவ முறைமையை தாபித்தல். | | | |
| | 8.11. | புதிய பெறுமதி சேர்த்தல் உற்பத்திகளுக்கு தர நியமங்களை செயற்படுத்துவதற்கான ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகள் திட்டத்தைத் தயாரித்துப் பின்பற்றுதல். | | | |
| | 8.12. | போட்டித்தன்மை வாய்ந்த பெறுமதி சேர்ந்த உணவு உற்பத்தி பொருட்களை தயாரிக்க சரியான நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி பின்பற்றுதல். | | | |
| | 8.13. | விவசாய உற்பத்தி பெறுமதி சேர்த்தலுக்கான உட்கட்டமைப்பு வசதியை (சிறு உற்பத்தியாளர்களையும் மற்றும் பாரியளவு தொழில்முயற்சியாளர்களையும் இணைக்கும் பொருத்தமான கட்டமைப்புகள்) வலுப்படுத்த உதவுதல். | | | |
| | 8.14. | அழியக்கூடிய பயிர்களின் மீது விஷேட கவனத்தை செலுத்தி பருவகால மிகைகளை தவிர்த்துக்கொள்வதற்கு சந்தைகளில் இலக்குக்கொள்கின்ற நன்கு திட்டமிடப்பட்ட ஒரு அடிப்படை பயிர்ச்செய்கை முறைமையைப் பின்பற்றுதல். | | | |
| | 8.15. | விவசாய மையத் தொழில் வாய்ப்பையும் அதிக பெறுமானம் சேர்த்தல் வாய்ப்புகளையும் (விவசாய மையத் தொழில்கள்) | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பெற்றுத்தரும் நிறுவனங்களுக்கு இடையிலான இணைப்பு வசதிகளை வலுப்படுத்த நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி அத்தகைய நடவடிக்கைகளைப் பின்பற்றுதல். | | | |
| | 8.16. | பெறுமான சங்கிலி முழுதிலும் விவசாய உற்பத்திற்கான கடன் வசதிகள் கிடைப்பதை உறுதிசெய்தல். | | | |
| | 8.17. | கமக்காரர் உற்பத்தியாளர் அமைப்புகள், FOs கள் மற்றும் கம்ககாரர் சம்மேளனங்கள் ஆகியவற்றின் ஊடாக பதனிடும் தொழில்முயற்சிகளை வலுப்படுத்துதல். | | | |
| | 8.18. | பொது பதனிடும் வசதிகளை பிராந்திய மட்டத்தில் தாபித்தல். | | | |
| கொள்கைக் கூற்று | **9.** | **தேசிய மற்றும் சர்வதேச தர நியமங்களுக்கு இணங்க பொருத்தமான உகந்த பொருட்கள் சேவைகள் அடங்கலாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை முறைமைகளை ஆராய்ந்து நெறிமுறைப்படுத்தல்.** | 3, 4, 7 | 1, 2, 8, 9, 12, 13, 14, 15 | **EDB, PMB, CAA**,<br><br>DOA, DAPH, SLCARP, HARTI<br><br>MASL<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 9.1. | பொருட்கள் சேவை முகாமைத்துவத்தை (உ+ம்: உற்பத்திகளை எடுத்துச்செல்லும் முறைமைகள், எடுத்துவரும் உற்பத்திகளை இறக்கும் முறைமைகள் முதலியன) த.பொ.ப. இன் ஊடாக வலுப்படுத்த சரியான நடவடிக்கைகளை எடுத்தல். | | | |
| | 9.2. | தேடிக்கண்டறிவதற்கான தொழில் நுட்பங்களையும் மற்றும் பொறிமுறைகளையும் (உ+ம்: சுழல்சங்கிலி முறைமைகள்) அறிமுகப்படுத்தி அவற்றைப் பின்பற்றுதல். | | | |
| | 9.3. | த.பொ.ப. ஐ ஊக்குவித்து காலம் நீடிக்கக்கூடிய களஞ்சியப் பெறுகை முறைமையை (உ+ம்: தானியப் பயிர்) பின்பற்றுதல். | | | |
| | 9.4. | அழியக்கூடிய பொருட்களுக்கு த.பொ.ப. ஊடாக வெப்பநிலை - RH-கட்டுப்பாடுடைய குளிரூட்டுகின்ற களஞ்சிய சங்கிலி வசதி முறைமைகளைத் தாபித்தல். | | | |
| | 9.5. | விவசாய உற்பத்தியையும் மற்றும் உற்பத்தி பொருட்களையும் சந்தைப்படுத்த பண்ணை நுழை மட்டத்தில் சந்தைப்படுத்தும் செயற்பாட்டை ஊக்குவிக்க முறைமைகளைப் பின்பற்றுதல். | | | |
| | 9.6. | மாவட்ட மட்டத்திலுள்ள பொருளாதார நிலையங்களை (DECs) பொருள்களின் விநியோகங்கள் அடங்கலாக ஒழுங்குறுத்திய சந்தை அடிப்படையிலான சேவை வழங்கும் நிலையங்களாக வலுப்படுத்துதல். | | | |

| கருப்பொருள் பிரிவு (7) | | உற்பத்தியாளர் ஊக்குவிப்பு | அடைய வேண்டிய கொள்கைக் குறிக்கோள்கள் | நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான (நி.அ.கு.) இணைப்பு | பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|
| கொள்கைக் கூற்று | **10.** | **விவசாய நிபுணத்துவ அறிவை பெற்றுக் கொள்ளல் மற்றும் பொருளாதார ரீதியில் சுயாதீனமாக விளங்கும் பொருட்டு உகந்த தீர்மானங்களை எடுத்தல் ஆகியவற்றின் நிமித்தம் விவசாயிகள் மற்றும் கிராமிய மக்கள் ஆகியோருக்கான பங்காளித்துவ மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சி திட்டங்களை வலுப்படுத்துதல்.** | 7, 8 | 1, 2, 4, 5, 10, 12, 13, 14, 15, 16, 17 | **DOA**, **NIPHM, DAPH,** DAD, PMB, SLCARP, HARTI, NLDB, MLEL, NADSA<br><br>PC & DS/GA<br><br>MASL<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை, சர்வதேச ஆராய்ச்சி நிறுவகங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 10.1. | பேரம்பேசும் சக்தி பற்றிய ஆற்றலை வளர்க்க ஒரு கமக்காரர் சம்மேளனத்திற்கு வழிவகுக்கும் கமக்காரர் உற்பத்தியாளர் அமைப்புகளை தாபித்தல் மற்றும் அத்தகைய அமைப்புகளை விவசாய வணிகங்களை கையாளுவதற்கான ஊக்கமுடைய சமூகத் தொழில்முயற்சிகளாகப் பரிவர்த்தனை செய்தல். | | | |
| | 10.2. | ஆகுசெலவு பற்றி விவசாயிகளுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்: உள்நாட்டில் உற்பத்தி செய்த விதைகளினதும் உள்ளீடுகளினதும் இலாபம், அனுகூலங்கள்/ பிரதிகூலங்கள். | | | |
| | 10.3. | விவசாய செயற்பாடுகளுக்கும், தொழில்முயற்சிகளுக்கும் அர்ப்பணித்த ஆதரவை வழங்கும் முகமாக கமக்காரர் மைய வங்கியல் முறைமையை (உ+ம்: கமக்காரர் வங்கி) தாபித்தல். | | | |
| | 10.4. | விவசாயப் பெறுமான சங்கிலி முறைமையிலுள்ள தரப்புகள் அபிவிருத்தி அடையவும் மற்றும் அவற்றுக்கு உதவுவதற்கும் அபிவிருத்தி வங்கி முறைமையை மறுசீரமைத்து அதனை வலுப்படுத்துதல். | | | |
| | 10.5. | விவசாயத்தில் ஒழுங்கமைந்த செயற்பாடுகளுக்கு உதவும் முகமாக முழுநேர விவசாயிகளை இனங்கண்டு அவர்களை விவசாய தொழில்முயற்சியாளர்களாக பதிவு செய்வதற்கான ஒரு பொறிமுறையைத் தாபித்தல். | | | |
| | 10.6. | கமநல நிலையங்கள், கமக்காரர் மற்றும் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs), FOs, கூட்டுறவுச்சங்கக் கடைகள் மற்றும் கமக்காரர் கம்பனிகள் முதலியவற்றின் வலிமையான ஒரு வலையமைப்பைத் தாபித்தல். | | | |
| | 10.7. | தனியார்-பொது-பங்காளித்துவத்தின் (த.பொ.ப.) இன் ஊடாக விவசாய வணிகத் தொழில்முயற்சிகளுடனான கமக்காரர் கொத்தணி அணுகுமுறையைப் பயன்படுத்தி விவசாயக் கைத்தொழில் வலயங்களைத் தாபித்தல். | | | |
| | 10.8. | உற்பத்தி ஆகுசெலவை குறைப்பதற்கும் வளங்கள் உற்பத்தித் திறனையும் இலாபத்தையும் அதிகரிப்பதற்கும் என சுமக்கக் கூடிய விலைகளில் கமக்காரர் புதிய தொழில் நுட்பத்திற்கு அணுகுவதை உறுதிசெய்ய ஒரு பொறிமுறையை தாபித்தல். | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 10.9. | கமக்காரரின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் வாய்ப்புகளை அதிகரிக்கவும் புதிய பெறுமதி சேர்ந்த விவசாய உற்பத்திற்கு பண்ணை நுழை விலைகளை அதிகரிக்கவும் FOs/FPOs களின் ஈடுபாட்டின் ஊடாக ஒரு விவசாய உற்பத்திக் கொள்வனவு, பகிர்ந்தளிப்பு முறைமையை (உ+ம்: பதிவு செய்த முகவர்கள், ஏலவிற்பனை முறைமை) தாபித்தல். | | | |
| | 10.10. | பல மட்டங்களிலும் குறிப்பாக விவசாய மற்றும் விவசாய வணிகத் துறையிலுள்ள தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலில் விவசாய டிப்ளோதாரிகளையும், விவசாய பட்டதாரிகளையும் முழுமையாக பயன்படுத்துவதற்கு ஒரு பொறிமுறையையும் மற்றும் கமக்காரர்களுக்கு ஒரு தொடர் கற்றல் தளத்தையும் தாபித்தல். | | | |
| கொள்கைக் கூற்று | **11.** | **பொறிமுறையாக்கல், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்தித்திறன் மைய ஊக்குவிப்பு முறைமைகளுக்கான அணுகல் ஆகியவற்றுக்கான உதவி அடங்கலாக விவசாயத்தில் இளைஞர் யுவதிகளையும் மற்றும் பெண்களையும் ஊக்குவித்தல்.** | 1, 2, 3, 4, 7 | 1, 2, 4, 5, 10, 12, 13, 14, 15, 16, 17 | **DOA**, **DAPH** DAD, AAIB, SLCARP, HARTI, NLDB, MLEL, NADSA<br><br>PC & DS/GA<br><br>**MASL**<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை, சர்வதேச ஆராய்ச்சி நிறுவகங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 11.1. | தொழிலுக்கான ஆற்றலை விருத்தி செய்தல், முகாமைத்துவ மாற்றத்தை ஏற்படுத்தல் ஆகியன அடங்கலாக விவசாயத்தில் பால்நிலை மைய அபிவிருத்திற்கு உதவுதல். | | | |
| | 11.2. | விவசாயத்தில் இளைஞர்கள் ஈடுபடும் வகையில் அவர்களை ஊக்குவிக்க நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுதல் மற்றும் டிஜிட்டல்மயப்படுத்தல், நிதிக்கான அணுகல் என்பன போன்ற பொருத்தமான சரியான நடவடிக்கைகளை எடுத்தல். | | | |
| | 11.3. | மேற்குறித்த 1.5 இற்கான இணைப்பு | | | |
| | 11.4. | மேற்குறித்த 1.6 இற்கான இணைப்பு | | | |
| | 11.5. | மேற்குறித்த 1.8 இற்கான இணைப்பு | | | |
| | 11.6. | மேற்குறித்த 2.12 இற்கான இணைப்பு | | | |
| | 11.7. | மேற்குறித்த 5.2 இற்கான இணைப்பு | | | |
| | 11.8. | மேற்குறித்த 6.2 இற்கான இணைப்பு | | | |
| | 11.9. | மேற்குறித்த 7.4 இற்கான இணைப்பு | | | |
| | 11.10. | மேற்குறித்த 10.7 இற்கான இணைப்பு | | | |

| கருப்பொருள் பிரிவு (8) | | காலநிலை நெகிழ்தன்மையும் ஏனைய இடர் முகாமைத்துவமும் | அடைய வேண்டிய கொள்கைக் குறிக்கோள்கள் | நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான (நி.அ.கு.) இணைப்பு | பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|
| கொள்கைக் கூற்று | **12.** | **விவசாய முறைமைகளின் காலநிலைக்கு ஈடுகொடுக்கும் தன்மையை அதிகரிக்கும் முகமாக தகுந்த தழுவல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் பின்பற்றலை ஊக்குவித்தல்.** | 9 | 1, 2, 4, 5, 10, 12, 13, 14, 15, 16, 17 | **DOA**, **DAPH**, DAD, NIPHM, PMB, SLCARP, HARTI, NFS, CFC, CCFC, NLDB, MLEL, NADSA<br><br>PC & DS/GA<br><br>DOM, DI, MASL<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை, சர்வதேச ஆராய்ச்சி நிறுவகங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 12.1. | வானிலைச் சுட்டி மையக் காலநிலை இடர் முகாமைத்துவக் கருவிசாதனங்களை வடிவமைத்துப் பயன்படுத்துதல். | | | |
| | 12.2. | வானிலை அவதான நிலையத்தினதும் ஏனைய உரிய நிரல் முகவர்நிலையங்களினதும் ஒத்துழைப்பில் ஒவ்வொரு பருவ காலம் ஆரம்பமாகுவதற்கு குறைந்தது ஒரு மாத காலத்திற்கு முன்னர் ஒரு பருவகால விவசாய சந்திப்பு ஆலோசனை (AMA) வழங்கும் பொறிமுறையைத் தாபித்தல். | | | |
| | 12.3. | காலநிலை மாற்றத்திற்கும் தேசிய ரீதியில் நிர்ணயமாகிய பங்களிப்புகளுக்குமான (NDC) தேசிய தழுவல் திட்டத்தில் (NAP) இனங்காணப்பட்டுள்ள விவசாயம் சம்பந்தமான செயல்களை பின்பற்றுதல். | | | |
| | 12.4. | உயிரற்ற மற்றும் உயிரியல் அழுத்தங்களுக்காக, காலநிலை நெகிழ் விவசாயத்திற்கு உதவுவதற்கு இனப்பெருக்க நிகழ்ச்சி திட்டங்களையும் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் தொடர்ந்து மேற்கொள்ளல் மற்றும் மேலும் வலுப்படுத்துதல். | | | |
| | 12.5. | விவசாயத்தில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியைப் பயன்படுத்த நிதி ஊக்குவிப்புத் திட்டங்களை முன்மொழிந்து பின்பற்றுதல். | | | |
| | 12.6. | தாவர உயிரணுத்திணிவை எரிப்பதை அதைரியப்படுத்தவும் அதனை கொம்போஸ்ட்டு உரமாகப் பரிவர்த்தனை செய்யவும் நடவடிக்கைகளை எடுத்தல். | | | |
| | 12.7. | மேற்குறித்த 1.3 இற்கான இணைப்பு | | | |
| | 12.8. | மேற்குறித்த 1.7 இற்கான இணைப்பு | | | |
| | 12.9. | மேற்குறித்த 8.1 இற்கான இணைப்பு | | | |
| கொள்கைக் கூற்று | **13.** | **திடீர் காலநிலை மாற்றங்களையும் மற்றும் ஏனைய அனர்த்தங்களையும் சமாளிக்கக் கூடிய வகையில் நகர மக்களையும் கிராமிய மக்களையும் ஒன்றிணைத்து உணவு முறைமைகளை வலுப்படுத்தல்.** | 9 | 1, 2, 11, 12, 13, 14, 15 | **DOA, DAPH**, DAD, NIPHM, PMB, SLCARP, HARTI, NFS, CFC, CCFC, NLDB, MLEL, NADSA<br><br>PC & DS/GA<br>MASL<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை, சர்வதேச |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 13.1. | குறிப்பாக நகரப் பகுதியில், விஷேட சூழ்நிலைகளில் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நெருக்கடி முகாமை பொறிமுறைகளைப் பின்பற்றுதல். | | | |
| | 13.2. | கிராம நகரப்புற மக்களுக்கு இடையிலுள்ள இணைப்பை வலுப்படுத்த நகரப்பகுதி உணவு முறைமையின் முக்கியமான விடய அம்சங்களை இனங்கண்டு வலுப்படுத்துதல். | | | |
| | 13.3. | நகரப் பகுதி உணவு முறைமைகளுக்கு உதவும் முகமாக மத்திய, மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களிலான நிருவாகம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடங்கலாக அமைச்சுகளுக்கு இடையில் ஒரு முக்கியமான குழுவைத் தாபித்தல். | | | ஆராய்ச்சி நிறுவகங்கள்,<br>அபிவிருத்திப் பங்காளிகள் |
| | 13.4. மேற்குறித்த 12.1 இற்கான இணைப்பு | | | |
| | 13.5. மேற்குறித்த 12.2 இற்கான இணைப்பு | | | |
| | 13.6. மேற்குறித்த 12.3 இற்கான இணைப்பு | | | |
| | 13.7. மேற்குறித்த 12.4 இற்கான இணைப்பு | | | |

| **கருப்பொருள் பிரிவு** (9) | **அறிவு முகாமைத்துவமும் விவசாய விரிவாக்கலும்** | **அடைய வேண்டிய கொள்கைக் குறிக்கோள்கள்** | **நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான (நி.அ.கு.) இணைப்பு** | **பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள்** |
|---|---|---|---|---|
| கொள்கைக் கூற்று | **14. ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விவசாய விரிவாக்கல் முறைமைகள், விவசாயத் துறையுடன் சம்பந்தமான ஆட்சேர்ப்பு ஆகியவற்றை முகாமை செய்யும் பொருட்டு கேந்திர ரீதியில் கட்டுப்பாடுடைய ஒரு தகவல் அபிவிருத்தி மற்றும் தகவல் பரம்பல் முறைமையைத் தாபித்தல்.** | 1, 2, 4, 8 | 1, 2, 4, 12, 13, 14, 15 | **DOA, DAD, DAPH**, PMB, SLCARP, HARTI, NFS,<br>NLDB, MLEL, NADSA |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 14.1. தேசிய அபிவிருத்தி குறிக்கோள்களை அடைவதில் ஒரு கேள்வி மைய விவசாய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல். | | | PC & DS/GA<br><br>MASL<br>DI, DOM<br><br>கமக்காரர் அமைப்புகள்,<br>பல்கலைக் கழகங்கள்,<br>தொழில்முறை சங்கங்கள்,<br>தனியார் துறை, சர்வதேச<br>ஆராய்ச்சி நிறுவகங்கள்,<br>அபிவிருத்திப் பங்காளிகள் |
| | 14.2. தொழில்நுட்ப அபிவிருத்தியின் நிமித்தம் ஆ.அ. ஐ ஊக்குவிக்க சரியான ஊக்குவிப்புத் திட்டங்களை (நிதி மற்றும் பௌதீக) முன்வைத்தல். | | | |
| | 14.3. தனியார்-பொதுப்-பங்காளித்துவத்தின் ஊடாக, முன்னுரிமை பயிர்களில் கலப்புப் பயிரினங்களையும் அதிக விளைச்சலை தரும் இனங்களையும் உற்பத்தி செய்ய ஆராய்ச்சியிலும் அதே போல் அபிவிருத்தியிலும் முதலீடு செய்தல். | | | |
| | 14.4. விவசாயக் கல்விக்கு ஆரம்பநிலை, இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம்நிலை ஆகிய மட்டங்களில் வசதிசெய்து அத்தகைய கல்வியை வலுப்படுத்துதல். | | | |
| | 14.5. தொடர்ச்சியாக இற்றைப்படுத்தவும் இலகுவாக பொதுமக்கள் அணுகவும் கூடிய உண்மைக் கால விவசாயத் தரவுத் தளத்தை தாபித்தல். | | | |
| | 14.6. விவசாயப் பாடத்தை குறைந்தபட்சம் க.பொ.த. சா/த பரீட்சை (KSA) வரையாவது படிப்படியாக ஒரு கட்டாயப் பாடமாகக் கூட்டிணைத்தல். | | | |
| | 14.7. டிப்ளோமா மற்றும் பட்டதாரி மாணவர் மட்டங்களில் விவசாய பாடவிதானத்திற்கு ஒரு தேவை-மைய அணுகுமுறை பற்றிய புராதன நவீன விவசாயத் தொழில்நுட்பங்களில் அதிகளவில் திறன்கள் அபிவிருத்தியைக் கூட்டிணைத்தல். | | | |
| | 14.8. ஒரு சந்தை-மைய விவசாய விரிவாக்கல் முறைமையைப் பின்பற்றுதல். | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 14.9. | உற்பத்தியாளர்களுக்கு பயனுள்ள விதத்தில் தகவல் பரம்பல் செய்யப்படுகின்றதா என்பதை உறுதிசெய்துகொள்வதற்கு த.பொ.ப. முறைமையை வலுப்படுத்துதல். | | | |
| | 14.10. | DOA, PDOA, இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் தனியார் துறை விரிவாக்கல் முறைமை ஆகியவற்றுக்கு இடையில் வலிமையான ஒரு இணைப்பில் முக்கியமாக ஒருங்கிணைந்த விவசாய விரிவாக்கல் முறைமையைத் தாபித்தல். | | | |
| | 14.11. | ஆகக்குறைந்தது NVQ 4 ஆம் மட்டத் தகைமையுடையவர்களை ஆரம்ப மட்டத்தில்/கிராம மட்டத்தில் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்களாக, புதிதாக ஆட்சேர்த்துக் கொள்ளல் அடங்கலாக ஆரம்ப மட்ட விரிவாக்கல் மாதிரிகளை மீளாய்வு செய்தல். | | | |
| | 14.12. | புதிய தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அந்தத் தொழில்நுட்பங்களின் பிரயோகத்தை ஊக்குவித்தல் - தகவல் பரம்பலுக்கான கையடக்கத் தொலைபேசி/தரவு டெப் தொழில்நுட்பங்களின் பிரயோகம் மற்றும் உண்மைக் காலப் பின்னூட்டல் (ASCs களில் AIs, ARPAs, கமக்காரர் குழுக்களின் தலைவர்கள்) | | | |
| | 14.13. | விவசாயிகள் சான்றுகளின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ள உதவும் வகையில் அவர்களுக்கு ஆலோசனை ஆதரவு சேவையை வழங்குதல். | | | |
| | 14.14. | ஒரு சந்தை-மைய விவசாய விரிவாக்கல் முறைமையை FO, DECs களின் ஈடுபாடு) தாபித்தல். | | | |
| | 14.15. | சந்தைத் தகவல்களை பரம்பல்செய்ய வினைத்திறன் வாய்ந்த ஒரு முறைமையைப் பின்பற்றுதல். | | | |
| | 14.16. | உரத்தினதும் பூச்சிநாசினிகளினதும் நியாயமான பாவனை பற்றிய அறிவை வளர்த்தல். | | | |
| | 14.17. | விவசாய விரிவாக்கல் முறைமையிலுள்ள உத்தியோகத்தர்கள் மீது இலக்குக்கொள்கின்ற அறிவு வளர்த்தல் மைய நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல். | | | |
| | 14.18. | தகுதி அடிப்படையிலான ஒரு திட்டத்தின் (மிகச்சிறந்த உகந்த மாதிரிகள்) ஊடாக, விவசாயம் சம்பந்தமான தொழில்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான தகவுதிறனைத் தயாரித்து பின்பற்றுதல். | | | |
| | 14.19. | விவசாயத்தில் தேர்ச்சியுடைய தொழிலாளரின் ஈடுபாட்டை அதிகரிக்க ஒரு பொறிமுறையைத் தயாரித்துப் பின்பற்றுதல். | | | |
| | 14.20. | சரியான நவீனத் தொழில்நுட்பங்கள் தொடர்பான அறிவை உற்பத்தியாளர்களுக்கு மத்தியில் வளர்க்கும் நோக்கில் வெளி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல். | | | |
| | 14.21. | நாட்டின் முன்னுரிமைகள் மைய விவசாய ஆராய்ச்சியின் நிமித்தம் தொடர்ச்சியாக நிதிகளை ஒதுக்குவதற்கான ஒரு பொறிமுறையைத் தயாரித்தல். | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 14.22. | விவசாயத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகின்ற போது ஏற்படுகின்ற தொழில் ஆபத்துக்களைக் குறைக்கப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்துதல். | | | |
| | 14.23. | கமக்காரர் மைய களப் பாடசாலைகள் (FFS) அணுகுமுறையை ஒரு பயனுள்ள தகவல் பரம்பல் வழிமுறையாகப் பின்பற்றுதல். | | | |
| | 14.24. | மேற்குறித்த 5.6 இற்கான இணைப்பு | | | |
| | 14.25. | மேற்குறித்த 11.1 இற்கான இணைப்பு | | | |
| | 14.26. | மேற்குறித்த 11.2 இற்கான இணைப்பு | | | |

| **கருப்பொருள் பிரிவு** (10) | | **நிருவாகமும் செயற்பாடுகள் முகாமைத்துவமும்** | **அடைய வேண்டிய கொள்கைக் குறிக்கோள்கள்** | **நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான (நி.அ.கு.) இணைப்பு** | **பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள்** |
|---|---|---|---|---|---|
| கொள்கைக் கூற்று | **15.** | **நிலையான விவசாய அபிவிருத்தியின் நிமித்தம் பரந்த ஒரு அக்கறையுடைய தரப்புப் பங்குபற்றலைக்கொண்டு தேசிய மட்டத்திலும் மற்றும் உள்ளூர் மட்டத்திலும் கருத் திட்டங்கள் செயற்படுத்துகை, கண்காணிப்பு மதிப்பீடு ஆகியவற்றின் நிமித்தம் நிறுவனசார் கூட்டிணைந்த ஒரு பொறிமுறையை வலுப்படுத்தல்.** | 10 | 1, 2, 12, 13, 14, 15, 16, 17 | DOA, DAD, NIPHM, PMB, DAPH, SLCARP, HARTI, NFS, CFC, CCFC, NLDB, MLEL, NADSA<br><br>PC & DS/GA<br><br>DI, DOM, MASL<br><br>கமக்காரர் அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை சங்கங்கள், தனியார் துறை, சர்வதேச ஆராய்ச்சி நிறுவகங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் |
| கொள்கை சார்ந்த செயற்பாடுகள் | 15.1. | மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைப்புகளுடன் கூடிய இணைப்புகள் அடங்கலாக ஒரு கொள்கை செயற்படுத்துகைக் கண்காணிப்பு மதிப்பீட்டுக் குழுவை (க.ம.)/தேசிய கொள்கை முகாமைத்துவக் குழுவை (ஒரு TOR ஐ உள்ளிட்டு) தாபித்தல். | | | |
| | 15.2. | குறித்த விவசாயக் கொள்கை அனுசரிக்கப்படுகின்றதா மற்றும் நுகர்வோர் உற்பத்தியாளர் இலாபங்கள் அதிகரிக்கின்றனவா என்பதை உறுதிசெய்துகொள்ள அமைச்சுக்களின் நிரல் முகவர் நிலையங்களுக்கு இடையில் பயனுள்ள ஒரு ஒருங்கிணைப்பு முறைமையை தாபித்தல். | | | |
| | 15.3. | உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் விலை சார்பாக ஆதரவளிக்க நிலையான ஒரு வரிவிதிப்பு அரசிறைக் கொள்கை முறைமையை பின்பற்றுதல். | | | |
| | 15.4. | வருடாந்த/பருவகால உற்பத்தி இலக்குகளினது அடிப்படையில் இறக்குமதிகளை ஒழுங்குறுத்துதல். | | | |
| | 15.5. | ஒவ்வொரு நிரல் முகவர்நிலையமும் அவை ஒன்றுக்கொன்று இணையாக உதவக்கூடிய வகையில் அவற்றின் கட்டாயத் தொழிற்பாடுகளையும் பணிகளையும் மீளவரையறை செய்து விவசாயக் கொள்கையின் செயற்படுத்துகைக்கும் பகுத்தறிவு ரீதியான தீர்மானமெடுத்தலுக்கும் உதவுதல். | | | |
| | 15.6. | தேசிய திட்டமிடல் திணைக்களத்தினது தலைமையீட்டின் (ஏனைய பொருத்தமான உரிய நிறுவனங்களுடன் இணைந்து) ஊடாக | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொள்கையை ஒன்றிணைப்பதற்கான ஒரு பொறிமுறையைப் பின்பற்றுதல். | | | |
| | 15.7. உணவு முறைமையில் ஒரு அரச தலையீட்டுச் செயலாற்றுகை மையப் பணி மதிப்பீட்டு முறைமையைப் பின்பற்றுதல். | | | |
| | 15.8. ஒழுங்குவிதிகளை செயற்படுத்துவதில் ஒருங்கிணைப்பு செய்ய முகவர்நிலையங்களை ஊக்குவிப்பது அடங்கலாக உரிய சட்டங்களை/கட்டளை சட்டங்களையும், ஒழுங்குவிதிகளையும் இற்றைப்படுத்துதல்/அபிவிருத்தி செய்தல், செயற்படுத்துதல். | | | |
| | 15.9. விவசாயத்தில் தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர் மட்டங்களில் தீர்மானமெடுக்கும் நடபடிமுறையில் கமக்காரர்களினதும், விஞ்ஞானிகளினதும், கல்விமான்களினதும், தனியார் துறை, அரச சார்பற்ற நிறுவனங்களினதும்(NGOs)/சமுதாய அடிப்படை நிறுவனங்களினதும் (ச.அ.நி.) ஈடுபாட்டில் சம்பந்தப்படுகின்ற பங்குபற்றல் அணுகுமுறைகளைப் பின்பற்றுதல். | | | |
| | 15.10. விவசாயம் சம்பந்தமான சட்டங்கள் மீறப்படுவதற்கு எதிரான தண்டனை சார் நடவடிக்கைகள் அடங்கிய ஒழுங்குவிதிகளை விதித்தல். | | | |
| | 15.11. விவசாயம் சம்பந்தமான தீர்மானமெடுத்தல் நடபடிமுறையில் தனியார் துறையையும் அபிவிருத்திப் பங்காளிகளையும் சம்பந்தப்படுத்துதல். | | | |
| | 15.12. விவசாயப் பிரிவுத் தனியார் துறை முகவர்நிலையங்களின் தொழில் அபிவிருத்தி சார்ந்த திட்டத்தை செயற்படுத்த ஒரு பொறிமுறையைப் பின்பற்றுதல். | | | |
| | 15.13. உப துறைகள் முழுதிலும் விவசாயத்தில் ஒரு செயலாற்றுகை மைய வெகுமதி முறைமையைத் தாபித்தல். | | | |
| | 15.14. குறிப்பாக புதிய இயந்திராதிகளினதும் மற்றும் தொழில் நுட்பங்களினதும் பாவனையில் விவசாய அபிவிருத்திற்கு தடையாக அமைகின்ற நிதி மற்றும் ஒழுங்குறுத்துகை சார்ந்த தடைகளை நீக்க நடவடிக்கைகளை எடுத்தல். | | | |
| | 15.15. பயனுள்ள செயற்படுத்துகை நிமித்தம் விவசாயம் சம்பந்தமான சட்டங்களுக்கும் மற்றும் ஏனைய பிற கொள்கைகளுக்கும் இயைந்தொழுகுதல். | | | |
| | 15.16. மேற்குறித்த 5.1 இற்கான இணைப்பு | | | |
| | 15.17. மேற்குறித்த 14.9 இற்கான இணைப்பு | | | |

**பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்களின் சுருக்கப் பெயர்கள்**

| | |
|---|---|
| AAIB | விவசாய கமநலக் காப்புறுதி சபை |
| CCFC | கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனம் |
| CFC | இலங்கை உரக் கூட்டுத்தாபனம் |
| DAD | கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| DAPH | விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் |
| PMB | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| DOA | விவசாயத் திணைக்களம் |
| DOI | நீர்ப்பாசனத் திணைக்களம் |
| DOM | வானிலை அவதான நிலையம் |
| DS | மாவட்ட செயலகம் |
| DWLC | வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் |
| FCA | உணவுக் கட்டுப்பாட்டு நிருவாகத் திணைக்களம் |
| HADABIMA | *ஹரித்த தனவி பிம் சங்வர்த்தன மத்தியம அதிகாரிய* |
| HARTI | ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம் |
| MASL | இலங்கை மகாவலி அதிகார சபை |
| MLEL | வ/ப மகாவலி கால்நடைகள் தொழில்முயற்சி நிறுவனம் |
| NADSA | தேசிய விவசாய அபிவிருத்திக் குடியேற்ற அதிகார சபை |
| NFPB | தேசிய உணவு ஊக்குவிப்புப் பணியகம் |
| NFS | தேசிய உர செயலகம் |
| NIPHM | தேசிய அறுவடைக்கு பின்-முகாமைத்துவ நிறுவகம் |
| NLDB | தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபை |
| PC | மாகாண சபை |
| SLCARP | இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை |
| SLSI | இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் |